People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

30.05.17

# பத்திரிகைச் செய்தி

தமிழ்நாடு காவல்துறை தலைவர், தலைமைச் செயலர், உள்துறைச் செயலர் ஆகியோர் இணைந்து மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் மீது போடப்பட்டுள்ள குண்டர் தடுப்புச் சட்ட வழக்கினை ரத்து செய்து, மனித உரிமை மீறலில் இருந்து அவரை மீட்க வேண்டும் என்று மக்கள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுக்கிறது.

காவல்துறையில் ஏடிஜிபி அந்தஸ்த்தில் இருக்கக்கூடிய அதிகாரி ஏ.கே.எஸ்.விஸ்வநாதன் மனித உரிமைக் காப்பாளர் திருமுருகன் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தியிருப்பது அவருடைய இறுதிப் பணிநாட்களில் சட்டத்தின் ஆட்சியை மீறி ஆளுங்கட்சிக்கு ஆதரவாக செயல்பட முயற்சிப்பது தெரியவருகிறது. திரு.ஏ.கே.எஸ்.விஸ்வநாதன் அவர்கள் காவல்துறை கூடுதல் ஆணையராக இருந்தபோதுதான் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்கள் காவல்துறையினரால் தாக்கப்பட்டனர் என்பது நினைவுகூரத்தக்கது.

தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து பொது இடங்களிலும் அறவழியில் அமைதியான போராட்டங்கள் நடத்துவதற்கும் குறிப்பாக மௌனப் போராட்டம் நடத்துவதற்குக்கூட தமிழகக் காவல்துறை படிப்படியாக அனுமதி மறுத்து வருவது மக்களின் போராடும் உரிமையை மறுப்பதாக மக்கள் கண்காணிப்பகம் கருதுகிறது.

முனித உரிமைக் காப்பாளர்களை 21ஆம் தேதி கைது செய்து பின்னர் திருமுருகன் உள்ளிட்ட 4பேரை மட்டும் சட்டக் காவலில் வைத்துவிட்டு மற்றவர்களை ஜாமீனில் விடுவித்தது பெருநகரக் காவல்துறை ஆணையருடைய நேரடி தலையீடுதான் காரணம் என்று மக்கள் கண்காணிப்பகம் கருதுகிறது. சட்டவிரோதமாக குண்டர் தடுப்புச்சட்டத்தைப் பயன்படுத்தியதற்கு இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள கட்டளை மற்றும் பொறுப்பு கொள்கை (Principle of

Command and Responsibility) யின்படி ஆணையரே பொறுப்பாவார். அவரே இதற்கு இறுதிவரை பதில் சொல்லும் பொறுப்பை ஏற்கவேண்டும் என்று மக்கள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுக்கிறது.

தேசிய மனித உரிமை ஆணையம் UN Working Group on Arbitrary Detention ஆகியவற்றுக்கு புகார் மனு அனுப்பியுள்ளதை இங்கே பதிவு செய்கிறோம்.

மேலும் தமிழ்நாடு காவல்துறை தலைவர், தலைமைச் செயலர், உள்துறைச் செயலர் ஆகியோர் இணைந்து மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் மீது போடப்பட்டுள்ள குண்டர் தடுப்புச் சட்ட வழக்கினை ரத்து செய்து, மனித உரிமை மீறலில் இருந்து அவரை மீட்க வேண்டும் என்று மக்கள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுக்கிறது.

ஹென்றி டிபேன்

செயல் இயக்குநர்